# பாடத்திட்டம்

## தாய்மொழி (தமிழ்) - தரம் 2

### 1.0 அறிமுகம்

ஆரம்பக் கல்விப்புல - தமிழ்மொழிப் பாடத்திற்கான விடயக்கூறுகள் மொழித்திறன்களான செவிமடுத்தல், பேச்சு, வாசிப்பு, எழுத்து ஆகிய பரப்புகளின் கீழ் வகுக்கப்பட்டுள்ளன. இரண்டாந்தர மொழிப்பாட உள்ளடக்கமும் அவ்வாறே அழைக்கப்பட்டுள்ளன. ஆசிரியர் விடயக் கூறுகளைத் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகவே அவை மொழித்திறன்கள் வாரியாக வகுக்கப்பட்டுள்ளன. கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளின்போது ஆசிரியர் அவற்றைப் பொருத்தமாக ஒன்றிணைத்தே செயற்படுத்த வேண்டும்.

தேர்ச்சி அடிப்படையிலான பாடத்திட்டம் என்றவகையில் இங்கே மொழிப்பாட வாரியான தேர்ச்சிகளுக்கு முக்கியத்துவமளிக்க வேண்டும். அதேவேளை தேசிய அடிப்படைத் தேர்ச்சிகள் தொடர்பாடத் தேர்ச்சிகளை முதன்மைப்படுத்தி ஏனைய தேர்ச்சிகளையும் மாணவர் எய்துதலிற் கவனஞ் செலுத்த வேண்டும்.

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

### 2.0 ஆரம்பக்கல்விப் புலத்தில் எதிர்பார்க்கப்படும் மொழி சார்ந்த தேர்ச்சிகள்

- ✓ இலகுவான பாடல்கள், சிறிய கதைகள் என்பவற்றைச் செவிமடுத்து இரசிப்பார்.
- ✓ இலகுவான அறிவுறுத்தல்கள், கட்டளைகள். அறிவித்தல்கள் என்பவற்றைச் செவிமடுத்துச் சிந்தித்துத் துலங்குவார்.
- ✓ தனது நாளாந்த தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்குக் கருத்துக்களைப் பரிமாறி நட்புறவுடன் பேசுவார்.
- ✓ தனக்குத் தெரிந்த பாடலைத் தாளலயத்துடன் பாடுவார்.
- ✓ சிறிய கதையொன்றை இரசனையுடன் கூறுவார்.
- ✓ வகுப்பறைக்கு உள்ளேயும் வெளியேயும் தகவலொன்றைப் பரிமாறுவார்.
- ✓ தான் பார்த்த, அல்லது கேட்ட நிகழ்வொன்றைத் தெளிவாகக் கூறுவார்.
- ✓ சபை முன்னே, ஒரு பொருள் பற்றிக் கூச்சமின்றிப் பேசுவார்.
- ✓ எழுத்துக்களை இனங்கண்டு, சரியாக உச்சரித்துப் பொருள் விளங்க வாக்கியங்களை வாசிப்பார்.
- ✓ நிறுத்தக்குறிகளை அனுசரித்துத் தொனிவேறுபாட்டுடன் இலகுவான வாக்கியங்கள் கொண்ட பந்தியை வாசிப்பார்.
- ✓ தனது தேவைக்காகப் பொது இடங்களிலுள்ள பெயர்ப்பலகைகளை வாசிப்பார்.
- ✓ சிறிய கதைகள், இலகுவான பாடல்கள் என்பவற்றை ஆர்வத்துடன் வாசித்து இரசிப்பார்.
- ✓ எழுத்துப் பொறிமுறைகளை (அளவு, அமைப்பு. திசைமுகம்) அனுசரித்து உறுப்பமைய எழுதுவார்.
- ✓ சொற்கள், தொடர்கள், சிறுவாக்கியங்கள் என்பவற்றைப் பார்த்தும், கேட்டும், சுயமாகவும் எழுதுவார்.
- ✓ தனது சுயவிபரங்களில் இலகுவான தகவல்களை எழுதுவார்.
- ✓ குறித்த ஒரு விடயம் பற்றிய இலகுவான வாக்கியங்கள் சிலவற்றை நிறுத்தக் குறிகளுடன் எழுதுவார்.

#### தரம் இரண்டிற்கான எதிர்பார்க்கும் தேர்ச்சிகள்

- ✓ சுற்றாடலில் கேட்கும் ஒலிகளைச் செவிமடுத்து ஒலித்துக் காட்டுவார்.
- ✓ சொற்களுக்கிடையில் வேறுபட்ட ஓசையுள்ள சொல்லை இனங்கண்டு வெளிப்படுத்துவார்.
- ✓ பல்வேறு சூழ்நிலைகளுக்கும் சந்தர்ப்பங்களுக்கும் ஏற்ற வகையில் செவிமடுத்துத் துலங்குவார்.
- ✓ தொடர்பாடல் விருத்திக்காகச் செவிமடுப்பார்.

- ✓ இரசனைக்காகச் செவிமடுப்பார்.
- ✓ செவிமடுத்துக் கிரகித்துத் துலங்குவார்.
- ✓ நாளாந்தத் தேவைகளை அனுசரித்துப் பேசுவார்.
- ✓ ஆக்கத்திறன் விருத்திக்காகப் பேசுவார்.
- ✓ இரசனைக்காகவும் பேச்சு விருத்திக்காகவும் பேசுவார், பாடுவார், கதைகூறுவார், நடித்துப் பேசுவார்.
- ✓ சொற்களஞ்சியத்தை விருத்தி செய்வதற்காக வாசிப்பார்.
- ✓ இரசனை பெறுவதற்காக வாசிப்பார்.
- ✓ எழுத்துப் பொறிமுறையை அனுசரித்து எழுதுவார்.
- ✓ சொற்களையும் தொடர்களையும் விளங்கி எழுதுவார்.
- ✓ பல்வேறு நோக்கங்களுக்காக எழுதுவார்.

## 3.0 கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள்

தரம் இரண்டு மொழிப்பாடத்திற்கான கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள் முதலாந் தரத்தின் தொடர்ச்சியாக அமைதல் வேண்டும். வழிப்படுத்திய விளையாட்டுக்கள், செயற்பாடுகள், எழுத்துப் பயிற்சி என்பவற்றில் அதிக மாற்றங்கள் இல்லை எனினும் எழுத்துப் பயிற்சிகளைச் சிறிது அதிகரிக்கலாம். அவை யாவும் ஏதாவதொரு கற்றல்பேறினை வெளிப்படுத்துவனவாக அமைதல் வேண்டும். சொற்கள், தொடர்கள், வாக்கியங்கள் தரம் ஒன்றினை விட உயர்வானதாகவும் அதற்கேற்ப தேர்ச்சிமட்டம் அதிகரித்தும் இருத்தல் வேண்டும். தரம் இரண்டிற்கென தரத்திற்கென உத்தேசித்த மொழித்தேர்ச்சிகளை மாணவர் எய்துவதற்கேற்பச் செயற்பாடுகள் திட்டமிடப்படுவதோடு பாடநூல், செயல்நூல், துணை வாசிப்பு நூல்கள் என்பவற்றைப் பொருத்தமாகப் பயன்படுத்த வேண்டும். செயற்பாடுகள், விளையாட்டுக்கள் வகுப்பறைக் குள்ளேயும் வெளியேயும் குழுக்களாக, சோடிகளாக, தனித்தனியாக, வகுப்புவாரியாக ஒழுங்குபடுத்தப்படலாம்.

## 4.0 பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்டமும்

தாய்மொழிப்பாட விருத்திக்கும் மேம்பாட்டுக்கும் உதவும் வகையில் பல வேலைத்திட்டங்கள் பாடசாலையில் நடைமுறையில் உள்ளன. அவற்றுள் சில வருமாறுஞ

- காலைக்கூட்டமும் நற்சிந்தனையும்
- வகுப்பு மன்றங்கள்
- கலை நிகழ்ச்சிகள்
- கண்காட்சிகள்
- சமய நிகழ்ச்சிகள்
- சிறுவர் நிகழ்ச்சிகள் - சந்தை, சுற்றுலா போன்றவை
- ஆசிரியர், பெற்றோர் தினம் ... போன்றவை

இவற்றை பயனுள்ளவாறு நடைமுறைப்படுத்தல் பாடசாலைக் கொள்கையாக அமைதல் வேண்டும். பாடசாலைச் சமூகமும் சமுதாயமும் இதற்கு ஆக்கபூர்வமான ஒத்துழைப்பு வழங்குதல் வேண்டும்.

## 6.0 கணிப்பீடு

ஒவ்வொரு தேர்ச்சியும் அல்லது எதிர்பார்க்கும் கற்றல் பேறுகள் ஒவ்வொன்றும் மாணவர் எய்துதலைக் கணிப்பீடு செய்தல் இங்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இக்கணிப்பீடு செயற்பாடு களின்போது தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படல் வேண்டும். சில சமயங்களில் கற்றல் கற்பித்தல் இறுதியிலும் மேற்கொள்ளப்படலாம். கற்றற்பேறுகள் பல்வேறு வடிவங்களில் அமைந்தாலும் செவிமடுத்தல், பேச்சு, வாசிப்பு, எழுத்து ஆகிய திறன்களோடு சம்பந்தப்பட்டவையாக அல்லது ஒன்றிணைந்து சம்பந்தப்பட்டதாக அமைய வேண்டும். கணிப்பீடு, அவதானித்தல், உற்று நோக்குதல், வாய்மொழி வினாக்கேட்டல், கட்டளைகள், அறிவுறுத்தல்களுக்குத் துலங்குதல் என்றவாறு அமையலாம். தரம் இரண்டில் எழுத்துப் பயிற்சிகளும் ஓரளவு வழங்கிக் கணிப்பீட்டினை மேற்கொள்ளலாம். தரம் இரண்டு முன்மை நிலை 1 இன் இறுதி வகுப்பு என்ற வகையில் முதன்மை நிலை 1 இற்குரிய தேர்ச்சிகளைக் கட்டாயம் எல்லா மாணவரும் எய்துதல் எதிர்பார்க்கப்படுகிறது.

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

# தாய்மொழி - தமிழ்

## 1.0 செவிமடுத்தல்

### 1.1 பல்வேறு நோக்கங்களுக்கும் சந்தர்ப்பங்களுக்கும் ஏற்ப வினைத்திறன் உள்ள கேட்போராகச் செயற்படுவார்.

1.1.1. சுற்றாடலிலுள்ள ஒலிகளைச் செவிமடுத்து ஒலித்துக் காட்டுவார்.
- ✓ புத்தளிப்புக் கருவிகள்
- ✓ இசைக்கருவிகளின் ஒலிகள்

1.1.2 சொற்களுக்கிடையில் வேறுபட்ட ஓசையுள்ள சொல்லை இனங்கண்டு வெளிப்படுத்துவார்.
- ✓ ர, ற வேறுபாடுகள்
- ✓ ண, ந, ன வேறுபாடுகள்
- ✓ ல, ள, ழ வேறுபாடுகள்

### 1.2 பல்வேறு சூழ்நிலைகளுக்கும் சந்தர்ப்பங்களுக்கும் ஏற்ற வகையில் செவிமடுத்துத் துலங்குவார்.

1.2.1 தொடர்பாடல் விருத்திக்காகச் செவிமடுப்பார்.

- ✓ சகபாடிகளுடன் உரையாடுதல்.
- ✓ ஆசிரியர்களுடன் உரையாடுதல்.
- ✓ பாடசாலை சமூகத்துடன் உரையாடுதல்.

1.2.2 இரசனைக்காகச் செவிமடுப்பார்.

- ✓ சிறுவர் பாடல்கள், கவிதைகள்
- ✓ கதைப்பாடல்கள், அபிநயப்பாடல்கள்
- ✓ கதைகள்
- ✓ நாடகங்கள்
- ✓ தனி நடிப்பு

1.2.3 செவிமடுத்துக் கிரகித்துத் துலங்குவார்.

- ✓ சொற்கள், சொற்றொடர்கள்
- ✓ செய்திகள், தகவல்கள்
- ✓ கட்டளைகள், அறிவித்தல்கள்
- ✓ அறிவுறுத்தல்கள்
- ✓ பாடல்கள், உரையாடல்கள்
- ✓ கதைகள் நிகழ்வுகள்
- ✓ சிறு நாடகங்கள்
- ✓ விடுகதைகள்
- ✓ புதிர்கள்
- ✓ வினாக்கள்

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## 2.0 பேச்சு

### 2.1 பல்வேறு தேவைகளுக்கும் நோக்கங்களுக்கும் சந்தர்ப்பங் களுக்கும் ஏற்ப ஆக்கபூர்வமாகப் பேசுவார்/ உரையாடுவார்.

2.1.1. நாளாந்தத் தேவைகளை அனுசரித்துப் பேசுவார்.

- ✓ தெளிவாக உச்சரித்துப் பேசுதல்.
- ✓ வீடு, பாடசாலை என்பவற்றின் தேவைகளுக்காகப் பேசுதல்
- ✓ பார்த்தவை, கேட்டவை பற்றிப் பேசுதல்.
- ✓ தகவல்கள், செய்திகள் என்பவற்றை அறியப் பேசுதல்

2.1.2 ஆக்கத்திறன் விருத்திக்காகப் பேசுவார்.

- ✓ கதைப் படங்களைப் பார்த்துக் கதைகளைக் கூறுதல்
- ✓ வினாக்களுக்கு விடை கூறுதல்
- ✓ முன்னாயத்தத்துடன் பேசுதல்

2.1.3 இரசனைக்காகவும் பேச்சு திறன் விருத்திக்காகவும் பேசுவார்/ பாடுவார்/ நடிப்பார்.

- ✓ சிறுவர் பாடல்கள்
- ✓ சிறுவர் கதைகள்
- ✓ சிறுவர் நாடகங்கள்
- ✓ புதிர்கள், விடுகதைகள் - கூறுதல், விடுவித்தல்

## 3.0 வாசிப்பு

### 3.1 எழுத்துக்களை இனங்கண்டு, சரியான உச்சரிப்புடன் உரத்து வாசிப்பார்.

3.1.1. சொற்கள் வாக்கியங்களை உரத்து வாசிப்பார்.

- ✓ படங்களுடன் சொற்களை வாசித்தல்
- ✓ படங்களின்றிச் சொற்களை வாசித்தல்
- ✓ சொற்கள் , சொற்றொடர்கள், வாக்கியங்கள் முதலியவற்றைச் சரியாக வாசித்தல்
- ✓ எழுத்தொலிகளைச் சேர்த்து சொற்களாக்கி வாசித்தல்
- ✓ ஒலி வேறுபாடுகளை அனுசரித்து வாசித்தல்
- ✓ நிறுத்தக்குறிகளை (. , ?) அனுசரித்து வாசித்தல்
- ✓ தொனி வேறுபாடுகளை அனுசரித்துத் தெளிவாக வாசித்தல்.

3.1.2 சொற்களஞ்சியத்தை விருத்தி செய்வதற்காக வாசிப்பார்.

- ✓ சொற்கள், தொடர்கள்
- ✓ பெயர்ச் சொற்கள்
  (வீடு, பாடசாலை, சூழல் ஆகியவற்றில் நாளாந்தம் காண்பவை)
- ✓ வினைச்சொற்கள்
- ✓ சுவரொட்டிகள்
- ✓ நாள், மாதம் - இவற்றின் பெயர்கள்
- ✓ உணவு, உணவுப் பொருட்கள், பானங்கள் என்பவற்றின் பெயர்கள்

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

3.1.3 இரசனை பெறுவதற்காக வாசிப்பார்.

- ✓ சிறுவர் கதைகள்
- ✓ வியப்பான தகவல்கள்
- ✓ சிரிப்பூட்டும் கதைகள்
- ✓ சித்திரக் கதைகள்
- ✓ பாடல்கள்

## 4.0 எழுத்து

### 4.1 நுட்பங்களையும், முறைகளையும் அனுசரித்து எழுதுந் திறனை விருத்தி செய்வார்.

4.1.1. எழுத்துப் பொறிமுறையை அனுசரித்து எழுதுவார்.

- ✓ அளவு, அமைப்பு, திசைமுகம், உறுப்பு, நேர்த்தி, முழுமை
- ✓ இடைவெளி, நிறுத்தக்குறிகள் (. , ?)
- ✓ உயிர்க்குறிகளுடன் எழுத்துக்களை எழுதுதல்
- ✓ நெடுங்கணக்கு வரிசைப்படி சொற்களை எழுதுதல்

4.1.2 சொற்களையும் தொடர்களையும் விளங்கி எழுதுவார்.

- ✓ படத்தைப் பார்த்து அது பற்றிய வாக்கியங்களை எழுதுதல்.
- ✓ இடைவெளிகளைப் பூர்த்தி செய்து எழுதுதல்
- ✓ பார்த்தெழுதுதல், சொல்வதெழுதுதல்
- ✓ எழுத்துக்களைக் கொண்டு, சொற்களை ஆக்கி எழுதுதல்
- ✓ சிறிய வாக்கியங்களை எழுதுதல்
- ✓ குறியீடுகளை விளங்கி எழுதுதல்

4.1.3 பல்வேறு நோக்கங்களுக்காக எழுதுவார்.

- ✓ தனது பெயர், முகவரி
  நண்பர்களின் பெயர்கள்.
  உறவினர் பெயர்கள்
- ✓ பாடசாலையின் பெயர், முகவரி
  ஊரின் பெயர்
- ✓ அண்மையிலுள்ள நிறுவனங்கள், சங்கங்கள்
- ✓ இலகுவான செய்திகள், தகவல்கள்

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

# சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்

## 01. அறிமுகம்

ஷஷசுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்' எனும் இக்கற்றல் கூறு, மனிதன் மீதும் மனித சமுதாயத்தின் மீதும் பல்வேறு விதங்களில் செல்வாக்குச் செலுத்திய அல்லது செலுத்து கின்ற பௌதிக, சமூக, உயிரியல் தொகுதிகள் தொடர்பாகவும் அவற்றை அடிப்படை யாகக் கொண்டு நிகழவேண்டிய கற்றல் செயலொழுங்கு தொடர்பாகவும் வழிப் படுத்துகிறது.''

குழந்தைப் பருவம் தொட்டு இயல்பாகவே மனிதன், தனது சுற்றுப்புறத்தின்பால் ஆர்வங்கொண்டு, கிரமமாக அச்சுற்றாடலுடன் வெற்றிகரமாக இடைத்தாக்கம் புரிவதற்கு அவசியமான தேர்ச்சிகளை அடைய முயற்சிக்கின்றான். இச்செயன்முறையின் போது தனது புலனுறுப்புக்களைப் பயன்படுத்துவதோடு அவற்றின் உணர்திறன்களை வகைப்படுத்தல், தர்க்கித்தல் போன்ற அறிவுசார் திறன்களையும் விருத்தி செய்து கொள்ளுகிறான். அவ்வாறே அவற்றின் ஊடாகத் தனது சொற்களஞ்சியத்தையும் தொடர்பாடல் திறனையும் விருத்தி செய்து கொள்ளுகிறான். தான் வாழும் சுற்றாடல் தொடர்பான தகவல்களைக் கண்டறிதல், சேகரித்தல், மீள வெளிப்படுத்துதல் என்பன பிள்ளையின் வாழ்க்கைச் செயன்முறையின் ஓர் அங்கமாகும். இது இயல்பாக எந்தவோர் உயிரியிலும் நிகழ்வதொன்றாகும். பிள்ளையின் அப்போக்கே ஷஷசுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்'' கட்டியெழுப்பப்படும் அடிப்படையாகும்.

அன்றாட வாழ்கையில் சந்திக்கும் சவால்களை வெற்றிகரமாக எதிர்கொள்ளக்கூடிய, நாட்டின் அபிவிருத்திச் செயன்முறையில் பங்களிக்கக்கூடிய, சமநிலையான ஆளுமையுடைய ஒருவரிடத்தே எழுத்தறிவு, கணித அறிவு, சமயம் தொடர்பான தேர்ச்சிகளோடு மேலும் பல துறைகளுக்குரிய தேர்ச்சிகளும் விருத்தியடைதல் வேண்டும். கடந்த காலங்களில் அமுலாக்கப்பட்ட ஆரம்பக்கல்விப் இக்கலைத்திட்டங்களில் அழகியற்கல்வி, ஆக்கத் தொழிற்பாடுகள், உடற்கல்வி, ஆரம்ப விஞ்ஞானம் போன்ற பாடங்களின் கீழ் அத்தேர்ச்சிகளை அடைவதற்கான சந்தர்ப்பங்கள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. ஆனால் புதிய கலைத்திட்டத்தில் ஷஷசுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்'' எனும் விரிவான பாடத்தின் கீழ் பல்வேறு துறைகளுக்குரிய தேர்ச்சிகளைச் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு வெளிக்கொணர இடமளிக்கப்பட்டுள்ளது. எனவே இது ஓர் ஒன்றிணைந்த பாடமாகும்.

முதன்மை நிலை ஒன்றில் 16 கருப்பொருள்களை மையமாகக்கொண்டு, சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் பாடத்தின் பாடத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. முதலாந் தரத்தில் முன்வைக்கப்பட்ட ஷஷதோட்டத்துக்கு வரும் பிராணிகள்'' எனும் கருப்பொருள் தவிர ஏனைய எல்லாக் கருப்பொருள்களும் அதே தலைப்புக்களில் இரண்டாந் தரத்துக்காகவும் முன்வைக்கப்படுகின்றன. அழகியல், ஆக்கம், உடற்கல்வி ஆகிய துறைகளுக்குப் பொருத்தமான தேர்ச்சிகளை வெளிக்கொணர்வதோடு, சமயம், தாய்மொழி, கணிதம் ஆகிய பிரதான பாடங்களை வளப்படுத்துவதற்கும் சுற்றாடல் தொடர்பான செயற்பாடுகளைப் பயன்படுத்தலாம். தரம் ஒன்றில் பிள்ளைகளின் உரையாடலுக்குப் பொருத்தமான ஆங்கிலச் சொற்களையும் இச்செயற்பாடுகளினூடாக வெளிக்கொணரலாம். இப்பாடத்திற்குரிய செயற்பாடுகளை ஒழுங்கு செய்யும்போது ஆசிரியருக்குத் துணையாக, உதவி புரிவோர் இருப்பாரெனின் அவற்றை ஒழுங்கமைத்தல் இலகுவாக அமையும். அப்பாடசாலையிலேயே தரம் 6இல் கல்வி பயிலும் பிள்ளைகளின் உதவியை இதற்குப் பெற்றுக்கொள்ளலாம்.

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

**பாடத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட சகல பகுதிகளும் அதிலுள்ளவாறே இலங்கையின் எல்லாப் பாடசாலைகளிலும் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும் என்பதில்லை. இப்பருவப் பிள்ளைகளின் சுற்றாடல் வரையறுக்கப்பட்டதாகும். அவ்வரையறையினுள் காணப்படுபவை, நிகழுபவை யாவும் எல்லாப் பாடசாலைகளுக்கும் பொதுவானவை அல்ல. எனவே பிள்ளைகளுக்காகச் செயற்பாடுகளைத் தெரிவு செய்யும்போது தனது சூழல் வளங்களுக்குப் பொருத்தமானவாறு அவற்றைத் தெரிவு செய்யும் சுதந்திரமும் பொறுப்பும் ஆசிரியருக்கு உண்டு.**

## 02. ஆரம்பக் கல்விப் பருவத்திற்குரிய தேர்ச்சிகள்

தரம் ஒன்று முதல் தரம் ஐந்து வரையிலான இக்கற்றல் பரப்பினூடாக மாணவரிடத்தே பின்வரும் தேர்ச்சிகளை விருத்தியடைவதற்கான வாய்ப்புக்களை வழங்க எதிர்பார்க்கப் படுகிறது.

- ✓ தனது சுற்றுப்புறத்தின் அழகினை இனங்கண்டு அதனூடாக இரசனை பெறுவார்.
- ✓ விளையாட்டு, ஓய்வு, களிப்பு என்பன வாழ்க்கைக்கு அவசியமான அம்சங்களெனக் கருதி அவற்றை நாளாந்த வாழ்வில் பொருத்தமாகச் சேர்த்துச் செயற்படுவார்.
- ✓ அழகானவற்றை மதித்து அவற்றைத் தனது வெளிப்பாட்டு நடவடிக்கைகளின் போது பயன்படுத்துவார்.
- ✓ ஆரோக்கிய வாழ்விற்குத் தேவையான அடிப்படைப் பழக்கங்களை வெளிக் காட்டுவார்.
- ✓ மனிதனின் ஆக்கங்களை மதிப்பார்.
- ✓ தனது சுற்றாடலில் வசிக்கும் உயிரினங்கள், அவற்றின் சில இடைத்தாக்கங்கள் என்பன தொடர்பான விளக்கத்தைப் பெற்றுச் செயற்படுவார்.
- ✓ மனித சமூகம், மனித நடத்தைகள், மனிதர் மீது அவற்றின் ஆதிக்கம் தொடர்பான விளக்கத்துடன் செயற்படுவார்.
- ✓ புவி அதன் வளங்கள், வெளி என்பன மனிதன் மீது செலுத்தும் செல்வாக்கை ஆராய்வார்.
- ✓ சூழல் பாதுகாப்புச் செயன்முறையில் தனது பொறுப்பை விளங்கி அதற்கேற்பச் செயற்படுவார்.
- ✓ தனது சுற்றாடலில் சக்திப் பயன்பாடு, விசைப் பிரயோகம் என்பன சமூகத்தின் முன்னேற்றத்தில் செல்வாக்குச் செலுத்தும் விதத்தினை கூர்ந்து நோக்கி மதிப்பார்.
- ✓ தமது சூழலிலுள்ள பொருட்களையும் உபகரணங்களையும் தேவைக்கேற்பப் பயன்படுத்தி எதிர்கால வேலையுலகிற்கு தேவையான அனுபவங்களைப் பெற்றுக் கொள்வார்.

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## 03. முதன்மை நிலை ஒன்றில் ஷஷசுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்" பாடத்துக்குரிய கற்றல் தேர்ச்சிகள்

- ✓ பாடசாலைச் சூழலுடன் இசைவடைந்து செயற்படுவார்.
- ✓ வீட்டில் மகிழ்ச்சியுடனும், பயனுறுதியுடைய வகையிலும் ஆட்களுடன் இடைத் தொடர்பு கொள்வார்.
- ✓ தகவல்களைச் சேகரிப்பதற்காக அவதானிப்பார்.
- ✓ அனுபவங்களினூடாக இலகுவான செயற்பாடுகளில் ஈடுபடுவார்.
- ✓ பழக்க வழக்கங்களை அனுசரித்துச் செயற்படுவார்.
- ✓ பாடசாலையுடன் தொடர்புடைய கடந்தகாலத் தகவல்களைத் தேடியறிவார்.
- ✓ ஆரோக்கிய வாழ்வுக்காக, நற்பழக்கங்களைப் பின்பற்றுவார்.
- ✓ நட்புடன் உரையாடி, தகவல்களைச் சரியாகப் பரிமாறுவார்.
- ✓ அயற்சூழலில் நிகழும் மாற்றங்கள் குறித்து உறுத்துணர்வுடன் செயற்படுவார்.
- ✓ தம்மையும் தமது அயற்சூழலையும் சுத்தமாகவும் நேர்த்தியாகவும் பேணுவதில் பங்களிப்பார்.
- ✓ ஏனையோர் விரும்பத்தக்க வகையில் தமது நடத்தைகளைப் பேணிவருவார்.
- ✓ அடிப்படை மெய்ந்நிலைகளைச் சரியாகப் பேணிவருவார்.
- ✓ அன்றாட வேலைகளின் போது தமது பாதுகாப்பு தொடர்பாகக் கவனஞ் செலுத்திச் செயற்படுவார்.
- ✓ வெளியைப் பொருத்தமானவாறு பயன்படுத்தி, விளையாட்டுக்களிலும் செயற்பாடு களிலும் ஈடுபடுவார்.
- ✓ குறித்த நோக்கங்களைக் கொண்ட வேலைகளில் கூட்டாகவும் பொறுப்புடனும் ஈடுபடுவார்.
- ✓ சுற்றாடற் பல்வகைமை குறித்து உறுத்துணர்வுடன் செயற்படுவார்.
- ✓ தேவையான சந்தர்ப்பங்களில் ஏனையோருக்கு உதவ முன்வருவார்.
- ✓ காட்சிப் பலகைகளில், படங்கள், குறியீடுகள், மற்றும் எழுத்து மூலம் காட்டப்பட்டுள்ள தகவல்களைப் பெறுவார்.
- ✓ தமது அனுபவங்களைச் சித்திரங்களாகவும் உருவ ஆக்கங்களாகவும் வெளியிடுவார்.
- ✓ சுற்றாடலில் உள்ள ஒலிகள், ஓசைகள், அசைவுகளையும், அவற்றுக்குரிய பாத்திரங்களையும் போலச் செய்து காட்டுவார்.
- ✓ அபிநயித்து ஆடிப்பாடுவார்.
- ✓ வெவ்வேறு வேலைகளின்போது இயைபாக்கத்துடன் உடலை அசைப்பார்.
- ✓ பல்வேறு பொருள்களைப் பயன்படுத்தி வெவ்வேறு ஆக்கங்களை உருவாக்குவார்.
- ✓ பெற்ற அனுபவங்களையும், சேகரித்த தகவல்களையும் தனியாகவோ, கூட்டாகவோ ஒரு தொகுதியினர் முன்னிலையில் சமர்ப்பிப்பார்.
- ✓ வீட்டிலும் பாடசாலையிலும் தமது கடமைகள், பொறுப்புக்கள் குறித்து உறுத்துணர்வுடன் செயற்படுவார்.

## 04. ஷஷசுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்" பாடத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான வழிப்படுத்தல்

- ✓ இப்பாடத்திட்டத்தில் பிள்ளையின் சுற்றாடல் 16 கருப்பொருள்கள் வாயிலாக விரிவுபடுத்தப்பட்டுள்ளது.
- ✓ சகலவற்றையும் திருப்திகரமான அனுபவங்களாகப் பெற்றுக் கொள்வதற்குப் பிள்ளைகளுக்கு இடமளிக்க வேண்டும். அதற்குப் போதியளவு திட்டமிடலும் ஆயத்தமும் அவசியமாகும்.

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- ✓ இங்கு தரப்பட்டுள்ள கருத்துகளுக்கேற்ப கற்றல் - கற்பித்தல் முறைகளைப் பிரயோகித்துப் பாடங்கள் திட்டமிடப்படல் வேண்டும். தகவல்களைத் தேடியறிதலும் தகவல்களை அறிக்கைப்படுத்தலும் முக்கியமானவையாகும். ஆரம்பக் கட்டத்தில் வாய்மொழியாகவும் பருமட்டான படங்கள் மூலமும் தமது அனுபவங்களை வெளிப்படுத்துவதற்குப் பிள்ளைகளை ஊக்குக. படிப்படியாக, சொற்களையும், வாக்கியங்களையும் ஓரளவு விளக்கமான படங்களையும் பயன்படுத்துவதற்குப் பிள்ளைகளை வழிப்படுத்துக.
- ✓ சகல, வேலைகளையும் முயற்சிகளையும் மதிக்க வேண்டும்.
- ✓ பிள்ளைகளைக் குழுக்களாக வேலைகளில் ஈடுபடுத்தவும். எனினும் ஆரம்பச் சந்தர்ப்பங்களில் குழுவில் செயலாற்ற வேண்டிய முறை தொடர்பாகப் பிள்ளைகளுக்கு வழிகாட்டுதலும் உதவி புரிதலும் அவசியமாகக் கூடும்.
- ✓ ஏதேனும் கருப்பொருள் தொடர்பாகக் கற்றல் - கற்பித்தல் நிகழ்ந்து கொண்டிருக்கும் போது படிப்படியாகக் குவியும் தகவல்களையும் பொருள்களையும் (படிப்படியாகக் கட்டியெழுப்பப்படும்) ஒரு கண்காட்சியாக மாற்றுக.
- ✓ குறித்தவோர் ஒழுங்கில் கருப்பொருள்கள் முன்வைக்கப்படவில்லை. எந்தவொரு நேரத்திற்கும் பொருத்தமான கருப்பொருளை எந்த இடத்திலிருந்தும் தெரிவு செய்வதற்கு ஆசிரியருக்குச் சுதந்திரமுண்டு.
- ✓ எப்போதும் பிள்ளைகளின் பாதுகாப்புக் குறித்து கவனஞ் செலுத்துவது அவசியமாகும்.

## 05. கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்

ஷஷசுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்'' எனும் பாடம், கற்பித்தலை விட கற்றலுக்கே முதலிடம் வழங்குகின்ற ஒரு கற்றல் - கற்பித்தற் செயன்முறையாகும். முழு வகுப்பையுமோ குழுக்களையோ தனித்தனி மாணவரையோ கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடுத்தலாம்.

ஆசிரியர் முன்கூட்டியே இதற்காக ஆயத்தங்களைச் செய்துகொள்ள வேண்டும். ஒரு குறித்த சந்தர்ப்பத்தில் வெவ்வேறு குழுக்களை வெவ்வேறுபட்ட வேலைகளில் ஈடுபடுத்தலாம். பரந்த பாடப்பரப்பை உள்ளடக்குவதற்கு இது வழிகோலும்.

மாணவர்களுக்காகத் திட்டமிடும் வேலைகளில், அவதானிப்புகள், களப் பிரயாணங்கள். கையாண்டு பார்த்தல், குறுஞ்செயற்றிட்டம், சேகரித்தல், வகிபாகமேற்றல் போன்ற பல்வேறு கற்றல் அணுகுமுறைகளினூடாகவும், மனிதர்களிடமிருந்தும் நூல்கள் அச்சு ஊடகங்கள் போன்ற இலத்திரனியல் ஊடகங்கள் போன்றவற்றினூடாகவும் தகவல் சேகரிப்பதற்குரிய நடவடிக்கைகள் அடங்கியிருத்தல் வேண்டும்.

## 06. பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்டமும்

ஆக்க, அழகியல், உடல் சார்ந்த தேர்ச்சிகளை விருத்தி செய்துகொள்ளும் பொருட்டு, பரந்த வீச்சில் கற்றல் - கற்பித்தல் அனுபவங்களை நிறைவு செய்துகொள்வதற்கான வாய்ப்புகள் வழங்கப்பட்டிருத்தல், இப்புதிய பாடத்திட்டத்தின் தெள்ளத்தெளிவான வேறுபாடுகளுள் ஒன்றாகும். இவ்வாறான மாற்றத்தை ஏற்படுத்துதவதற்காக, வகுப்பறை மாத்திரமன்றி, பாடசாலைச் சூழலும், அவ்வாறான பிள்ளைகளை நோக்கும் கண்ணோட்டமும் கூட மாற்றமடைதல் வேண்டும்.

எனவே நாள் முழுவதும் மேசைக்கருகில், கதிரையில் அமர்ந்திருப்பதற்குப் பதிலாக பல்வேறு மெய்ந்நிலைகளிலும் மகிழ்ச்சியுடன் செயற்பாடுகளில் ஈடுபடும் பிள்ளைகளைக்

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

காணக்கூடியவாறாகவே பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்டங்களும் ஒழுங்கமைக்கப்படல் வேண்டும்.

இவ்வாறாகத் திட்டமிடப்படும் வகுப்பில் காணப்பட வேண்டிய பண்புகள் வருமாறுளூ

- ✓ பாடசாலை நேரத்தினுள், தரம் ஒன்றில் கற்கும் இப் பிள்ளைகளுக்குப் பிரதானமாக விளையாட்டுடன் கூடிய செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான சுற்றாடலை ஒழுங்கு செய்தல்.
- ✓ திறந்த வெளியில் கற்பதற்கான வாய்ப்பு வசதிகளை வழங்குதல்.
- ✓ பாடசாலையில், விளையாட்டுக்கள், அழகியற் செயற்பாடுகள், வேறு இணைப்பாட நடவடிக்கைகளின்போது தரம் ஒன்றின் பிள்ளைகளையும் பங்குகொள்ளச் செய்தல்.

## 07. மாணவர் முன்னேற்றத்தைக் கணிப்பிடல்

சுற்றாடல் சார் செயற்பாடுகள் பாட கணிப்பீட்டின் போது அக்கற்றற்பணியினூடாக மாணவருக்கு வழங்க எதிர்பார்க்கப்படும், அறிவு, திறன்கள், மனப்பாங்குகள், பழக்கங்கள் ஆகிய அனைத்தையும் கவனத்திற்கொள்ள வேண்டும். அத்தோடு சமூகத் திறன்களிலும் விசேட கவனஞ் செலுத்த வேண்டும்.

அந்த மாணவர் குழுக்களிடம் அல்லது தனித்தனி மாணவ மாணவியினரிடம் காணப்படும் குறைபாடுகளை, தொடரும் கற்றல் நடவடிக்கைகளின்போது நிவர்த்திக்கும் நோக்கத்துடனேயே இக்கணிப்பீடு நடாத்தப்படல் வேண்டும்.

இதற்காக, பெரும்பாலும் முறைசார் மதிப்பீட்டு முறைகளுக்கு அப்பாற்பட்ட முறைகளையே கையாள வேண்டியிருக்கும். பிள்ளைகள், வேலைகளில் ஈடுபட்டிருக்கும் வேளைகளில் அவர்களை அவதானித்து, அவர்கள் கூறுபவற்றைச் செவிமடுத்தும், அவர்களோடு கலந்துரையாடியும் இதற்கான வாய்ப்புக்களை உருவாக்கிக்கொள்ளலாம். அவற்றை ஒழுங்காகப் பதிவு செய்வதற்காக ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் தரப்பட்டுள்ள கணிப்பீட்டு அறிக்கையைப் பயன்படுத்தலாம்.

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

# சுற்றாடல்சார் செயற்பாடுகள்
# பாடத்திட்டம் - தரம் இரண்டு

## கருப்பொருள் : 1.0 நாமும் பாடசாலையும்

### தேர்ச்சிகள்

✓ பாடசாலையிலுள்ள பல்வேறு நபர்களின் வகிபாகங்களை (Roles)இனங்கண்டு அதற்கேற்பச் செயற்படுவார்.
✓ பிறரை நட்புணர்வுடன் வரவேற்று சந்தர்ப்பத்துக்கு ஏற்ப நடந்துகொள்வார்.
✓ பண்புடன் நடந்துகொள்ளும் பழக்கத்தை வெளிக்காட்டுவார்.
✓ ஒற்றுமை வெற்றிக்கு வழிகோலும் என்பதை ஏற்று அதற்கமைய செயற்படுவார்.'
✓ பாடசாலை வளவிலும் சுற்றுப் புறத்திலுமுள்ள சிறப்பானதும் முக்கியமானதுமான தாவரங்கள், இடங்கள் மற்றும் இயல்புகள் ஆகியவற்றை இனங்கண்டு அவற்றைப் பாதுகாப்பாகப் பேணுவதற்குப் பங்களிப்புச் செய்வார்.
✓ கிராமத்தினால் பாடசாலைக்கும் பாடசாலையினால் கிராமத்துக்கும் ஆற்றப்படும் சேவைகளை இனங்கண்டு தம்மால் இயன்றவரையில் அச்சேவைகளுக்குப் பங்களிப்புச் செய்வார்.
✓ பாடசாலை தனக்குப் பாதுகாப்பானதும், விருப்புக்குரியதும், பயனுடையதுமான இடமாக இனங்கண்டு செயற்படுவார்.
✓ விளையாட்டு மைதானம் மிகப் பயனுள்ள இடமென ஏற்று அதனை நன்கு பேணுவதில் பங்களிப்பார்.

### உள்ளடக்கம்

✓ ஆரம்பப் பிரிவில் கற்பிக்கும் ஆசிரியர்கள் பற்றிய தகவல்கள்.
✓ பாடசாலையுடன் தொடர்பான சிறப்பான இடங்கள், தாவரங்கள், பண்புகள் பற்றிய தகவல்கள்.
✓ பாடசாலையின் அயலில் அமைந்துள்ள சிறப்பான இடங்கள், இயற்கை அம்சங்கள்.
✓ சமுதாயத்தினால் பாடசாலைக்கும் பாடசாலையினால் சமுதாயத்துக்கும் ஆற்றப்படும் சேவைகள்.
✓ பல்வேறு ஊடகங்களைப் பயன்படுத்தியவாறு நிர்ணமாணிக்கப்பட்ட அயற்சூழலில் தன்னைக் கவர்ந்த இடங்களைக் காட்டும் ஆக்கங்கள்.
✓ சமுதாயத்தில் உள்ள சிறப்பு வாய்ந்தோரை உருவகித்து நடித்தல்.
✓ பாடசாலைக் கீதத்தைப் பாடுதல்.
✓ ஷஷஎமது பாடசாலை'' எனும் தலைப்பிலான மனங்கவர் ஆக்கக் கண்காட்சிகள்.

### அணுகுமுறைகளும் செயற்பாடுகளும்

✓ காலைக்கூட்டமொன்றில் அதிபரையும் ஆரம்ப வகுப்புகளுக்கான ஆசிரிய ஆசிரியைகளையும் இனங்காண்பதற்கான ஒரு வேலைத்திட்டத்தைத் திட்டமிடல். பின்னர் ஆரம்ப வகுப்புக்களில் ஆசிரியர்கள்/ஆசிரியைகள் இருக்கும் இடங்களை அவதானித்து வெவ்வேறு விதமாக அறிக்கைப்படுத்தல்.
✓ பாடசாலைத் தோட்டத்தை அவதானிக்க வழிப்படுத்தி, தாவரங்கள், பாடசாலையின் சிறப்பான இடங்கள் ஆகியன பற்றிய தகவல்களைச் சேகரிக்கச் செய்தல். சேகரித்த தகவல்களை பல்வேறு விதமாக அறிக்கைப்படுத்தல். (வாய்மொழி மூலம், சித்திரங்களாக, மாதிரியுருக்களாக, தாவரப் பொருள்களைத் துணையாகக் கொண்டு அலங்கார வடிவமைப்புக்களாக, பாடல்களாக, ஆடல்களாக)
✓ சமுதாயத்தினால் பாடசாலைக்கும் பாடசாலையினால் சமுதாயத்துக்கும் ஆற்றப்படும் பல்வேறு சேவைகள் பற்றிக் கலந்துரையாடல். அவ்வாறான சந்தர்ப்பங்களில் பங்குபற்ற வாய்ப்பளித்தல். அவ்வாறான வேலைத்திட்டங்கள் பற்றி அறிவூட்டல்ளூ ஊர்வலங்களை ஒழுங்கு செய்தல்.

***எடுத்துக்காட்டு:*** டெங்கு ஒழிப்பு, போசணை வேலைத்திட்டம், மர நடுகை வேலைத்திட்டங்கள், ஊர்வலங்கள் போன்றவற்றை ஒழுங்கு செய்தல்

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- ✓ பாடசாலைக் கொடியை ஏற்றி பாடசாலைக் கீதத்தை ஒன்று சேர்ந்து பாடுதல்.
- ✓ கருப்பொருளின் இறுதியில் வகுப்பு மட்டக் கண்காட்சியை நடாத்துதல்.
- ✓ விளையாட்டு முற்றம், விளையாட்டு மைதானம் ஆகியவற்றில் குழு விளையாட்டுக்களிலீடுபடல்.

## கருப்பொருள் : 2.0 எமது வீடு

### தேர்ச்சிகள்

- ✓ பல்வேறு இடங்கள் சார்பாகத் தமது வீட்டின் அமைவிடத்தைக் கூறுவார்.
- ✓ குடும்பத்துக்கு நெருக்கமான உறவினர்களையும், உறவு முறைகளையும் பற்றிய தகவல்களைத் தேடியறிந்து கூறுவார்.
- ✓ தமது வீட்டுக்கு வரும் உறவினர், நண்பர்கள், விருந்தினர்கள் ஆகியோருடன் நன்மனப்பாங்குடன் நடந்துகொள்வார்.
- ✓ வீட்டின் அடிப்படைத் தேவைகளையும் அவை கிடைக்கும் முறைகளையும் அறிக்கைப்படுத்துவார்.
- ✓ வீட்டுக்குத் தேவையான பல்வேறு உணவுப் பொருள்களை வீட்டுத்தோட்டத்தில் இருந்து பெறுவதில் பங்களிப்புச் செய்வார்.
- ✓ வீட்டுச் சூழலைச் சுத்தமாகவும் அழகாகவும் வைத்திருக்கப் பங்களிப்புச் செய்வார்.
- ✓ வீட்டுக்குப் பல்வேறு பொருட்களை வழங்கும் நபர்களைப் போன்று பாத்திரமேற்று நடித்துக் காட்டுவார்.
- ✓ வீட்டு வேலைகளை இலகுபடுத்தவும், வீட்டை அலங்கரிக்கவும் தேவையானவற்றை ஆக்குவார்.
- ✓ மகிழ்வுடன் கூட்டாக உள்ளக விளையாட்டுக்களில் ஈடுபடுவார்.

### உள்ளடக்கம்

- ✓ தமது வீட்டின் சார்பளவிலான அமைவிடம் தொடர்பாக வாய்மொழி மூலமாகவும் சித்தரிப்பு மூலமாகவும் காட்டுதல்.
- ✓ தமது குடும்பத்திற்கு நெருக்கமான உறவினரின் உறவு முறை பற்றிய அடிப்படைத் தகவல்கள்.
- ✓ தமது வீட்டுக்கு அடிப்படையாகத் தேவைப்படும் பொருள்களை வழங்கும் இடங்களும் அவை வழங்கப்படும் முறைகளும்.
- ✓ தமது வீடு, அயல் ஆகியவற்றின் அழகு, பாதுகாப்பு ஆகியவற்றுக்காக மேற் கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள்.
- ✓ வீட்டிற்கு சூரியஒளி, காற்று ஆகியன கிடைக்கும் வழிகள்
- ✓ வீட்டு அங்கத்தவரின் செயற்பாடுகளைப் போலச் செய்தலும், பங்கேற்று நடித்தலும்.
- ✓ வீட்டை அலங்கரிப்பதற்கு ஏற்ற ஆக்கங்கள்.
- ✓ உள்ளக விளையாட்டுக்கள்.

### அணுகுமுறையும் செயற்பாடுகளும்

- ✓ தமது வீட்டின் அமைவு குறித்து ஏனையோருக்கு கூறுவதற்கும், எடுத்துக்காட்டு வதற்கும் செயன்முறைச் செயற்பாடுகளில் ஈடுபடல்.(விளையாட்டுமனை)
- ✓ தமது வீட்டின் மாதிரியுருவை ஆக்குதல், குழுக்களாக மாதிரி வீடுகளை அமைத்து ஒரு கிராமத்தின் மாதிரியை ஆக்குதல்.
- ✓ வீட்டு அங்கத்தவர்களையும் வீட்டுக்கு வருவோரையும் வரவேற்றல், உபசரித்தல் பற்றி அறிந்துகொள்வதற்காக பாத்திரமேற்று நடித்தல்களில் ஈடுபடலும், குடும்ப அங்கத்தவர்களைக் காட்டும் சித்திரங்களை வரைதலும்.
- ✓ வீட்டுக்குத் தேவையான பொருள்கள் எங்கிருந்து யாரால் கொண்டுவரப்படுகின்றன என்பவை பற்றிக் கலந்துரையாடலும் செயற்பாடுகளினூடாக விளக்குதலும்,

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

தகவல்களை அறிக்கைப்படுத்துவதற்காக ஆடல், பாடல்கள் பல்வேறு பொருள் களின் மாதிரிகளை ஆக்குதல் போன்றவற்றில் ஈடுபடுத்துதலும்.

- ✓ பாடசாலையில் இப்பண்புகள் எந்த அளவுக்குக் காணப்படுகின்றன என்பதை அவதானித்தலும். வெவ்வேறு வகையாக அறிக்கைப்படுத்த வழிப்படுத்துதலும். (உரையாடல்கள், ஆடல் பாடல்கள்)
- ✓ வீட்டில் ஈடுபடக்கூடிய பல்வேறு விளையாட்டுக்களில் பங்குபற்றுதல்.

## கருப்பொருள் : 3.0 எம்மைச் சூழவுள்ள பிராணிகள்

### தேர்ச்சிகள்

- ✓ அயற்சூழலில் காணப்படும் பிராணிகளை வெவ்வேறு இயல்புகளின் அடிப்படையில் வகைப்படுத்துவார்/அறிக்கைப்படுத்தவார்.
- ✓ பிராணிகளின் வருகை, நடத்தை ஆகியவற்றுக்கும் நாளின் வெவ்வேறு நேரங்களுக் கும் இடையே தொடர்புகள் உள்ளனவா என நுணுகியாராய்து அறிக்கைப் படுத்துவார்.
- ✓ பிராணிகளுக்கும் மரஞ்செடி கொடிகளுக்கும் இடையிலான தொடர்பு பற்றிக் கரிசனை காட்டி தகவல் சேகரிப்பார்.
- ✓ பிராணிகளுக்கே இயல்பான நடத்தைகளுள் அன்றாட வாழ்வில் மனிதனுக்குப் பயன்படும் நடத்தைகளைத் தேடியாராய்ந்து கருத்துக்களைக் கூறுவார்.
- ✓ ஆக்கத்திறன் மிக்கதாக பிராணிகளைப் போல நடித்துக் காட்டுவார்.
- ✓ பல்வேறு பொருட்களைப் பயன்படுத்தி பிராணிகளின் காட்டுருக்களை அமைப்பார்.
- ✓ பிராணிகளுடன் தொடர்பான ஆக்கபூர்வமான விளையாட்டுக்களில் ஈடுபட்டவாறு இரசனையைப் பெறுவார்.

### உள்ளடக்கம்

- ✓ அயற் சூழலில் சஞ்சரிக்கும் பல்வேறு பிராணிகளுக்கு இடையிலான பரஸ்பர தொடர்புகள்.
- ✓ பிராணிகளுக்கும் தோட்டத்தில் உள்ள மரஞ்செடி கொடிகளுக்கும் இடையிலான தொடர்புகள்.
- ✓ பிராணிகளின் நடத்தைகளையும் அவை எழுப்பும் ஒலிகளையும் போலச்செய்தல்.
- ✓ பிராணிகளின் மாதிரியுருக்களை ஆக்குதல்.
- ✓ பிராணிகள் சார்ந்த ஆக்கபூர்வமான விளையாட்டுககள்.
- ✓ மனிதன் தனது பல்வேறு தேவைகளுக்காக வளர்க்கும் பிராணிகளிடத்தே காணப் படும் நல்ல பழக்கங்கள் பற்றிய தகவல்களும் அனுபவங்களும்.

### அணுகுமுறையும் செயற்பாடுகளும்

- ✓ பாடசாலைத் தோட்டத்தில் /அயற்சூழலில் சஞ்சரிக்கும் பிராணிகளை அவதானிக்க வழிப்படுத்தலும், பிராணிகளின் பண்புகளுக்கேற்ப அவற்றை வகைப்படுத்தத்தக்க வகையில் கலந்துரையாடலும்.
- ✓ பிராணிகள் எழுப்பும் ஒலிகளையும் பிராணிகளின் நடத்தைகளையும் போலச் செய்தலும் பிராணிகள் பற்றிய ஆடல் பாடல்களில் ஈடுபடுதலும்
- ✓ பிராணிகளின் மாதிரியுருக்களை ஆக்குதல்.
- ✓ பிராணிகளுக்கும் மரஞ்செடி கொடிகளுக்கும் இடையிலான தொடர்பை இனங்காண் பதற்காக அவதானித்தலும் வெவ்வேறுவகையாக அறிக்கைப்படுத்தலும்
- ✓ பிராணிகளால் மரஞ்செடி கொடிகளுக்குக் கிடைக்கும் பயன்கள், ஏற்படும் சேதங்கள் பற்றிய அனுபவங்களைப் பரிமாறுதல்.
- ✓ பிராணிகளின் நல்ல பழக்கங்களை வெளிப்படுத்தும் குறுநாடகங்களை நடிப்பதற்கும் ஆடிப் பாடுவதற்கும் விளையாடுவதற்கும் வாய்ப்பளித்தல்.

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## கருப்பொருள் : 4.0 நீருடன் விளையாட்டு

### தேர்ச்சிகள்

✓ ஓடும் நீரின் தொழிற்பாடு பற்றி ஆராய்ந்து அறிக்கைப்படுத்துவார்.
✓ நீரிலிருந்து பெறக்கூடிய பயன்களை செய்துபார்த்து அது பற்றிய கருத்துக்களைக் கூறுவார்.
✓ சுயபாதுகாப்பு தொடர்பாகக் கரிசனை காட்டியவாறு நீரை ஓரிடத்திலிருந்து அகற்றக்கூடிய பல்வேறு முறைகளை செய்துகாட்டுவார்.
✓ ஓடும் நீரைக்கொண்டு இயக்கத்தக்க வெவ்வேறு உபகரணங்களை ஆக்குவார்.
✓ இரசனைக்காக நீரைக்கொண்டு ஒலிகளையும் நாதங்களையும் எழுப்புவார்.
✓ நீரைப்பயன்படுத்தி ஈடுபடக்கூடிய சில விளையாட்டுக்களிலீடுபடுவார்.

### உள்ளடக்கம்

✓ ஓடும் நீர் காரணமாக நிகழுபவையும் ஓடும் நீரைப்பயன்படுத்தி மேற்கொள்ளக் கூடியவையும்.
✓ பலவற்றை அகற்றுவதற்கு நீர் பயன்படுகின்றமை.
✓ நீரை அகற்றுவதற்காகப் பயன்படுத்தக்கூடிய முறைகளும் நீரினால் கழுவி அகற்றக் கூடியவையும் அகற்ற முடியாதவையும்.
✓ நீரைக்கொண்டு ஒலிகளையும் நாதங்களையும் ஆக்குதல்.
✓ நீரைக்கொண்டு பயன்படுத்தக்கூடிய ஆக்கங்கள்.
✓ நீரினால் ஏற்படக்கூடிய விபத்துக்களிலிருந்து பாதுகாப்புப்பெறும் முறை.
✓ நீரைப்பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் விளையாட்டுக்கள்.

### அணுகுமுறையும் செயற்பாடுகளும்

✓ ஓடும் நீர் காரணமாக நிகழுபவற்றையும் நீருள் பொருட்களைப் போடும்போது நிகழுபவற்றையும் அவதானிப்பதற்கு வாய்ப்பளித்தலும் அறிக்கைப்படுத்த வகை செய்தலும்.
✓ ஓடும் நீரைக்கொண்டு பயன்படுத்தக்கூடிய ஆக்கங்களை உருவாக்க வழிப்படுத்தல்.
✓ ஓடும் நீரின் பயன்கள் பற்றிக் கலந்துரையாடல்.
✓ பல்வகையானவற்றை அகற்றுவதற்கு ஓடும் நீர் பயன்படுகின்றமையை எடுத்துக் காட்டும் செயன்முறையான செயற்பாடுகளிலீடுபடல்.
✓ யாதேனும் ஓர் இடத்தில் இருந்து நீரை அகற்றுவதற்காகக் கையாளத்தக்க முறைகளைச் செய்து பார்த்தல்.
✓ நீரைக்கொண்டு ஒலிகளையும் நாதங்களையும் ஆக்க வாய்ப்பளித்தல். நீர் பற்றிய பாடல்களைப் பாடவும் அதற்கேற்ப ஆடவும் வாய்ப்பளித்தல்.
✓ நீருடன் தொடர்பான ஆக்கத்திறன் வாய்ந்த விளையாட்டுக்களில் ஈடுபடல்.

## கருப்பொருள் : 5.0 புத்தாண்டுக் காலம்

### தேர்ச்சிகள்

✓ புத்தாண்டுக் காலத்தில் சூழலிலும் தாம் வாழும் சமூகத்திலும் ஏற்படும் மாற்றங்கள் பற்றிய அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வார்.
✓ புத்தாண்டுப் பாரம்பரியங்களைப் பேணி புத்தாண்டு விழாவொன்றை நடாத்து வதற்குப் பங்களிப்புச் செய்வார்.
✓ புத்தாண்டுக் காலத்தில் அயற்சூழலில் ஏற்படும் வனப்பு விளங்கத்தக்கதான பாடல், இசை, நடிப்பு ஆகியவற்றில் ஈடுபடுவார்.
✓ ஏனைய இனத்தவரின் புத்தாண்டுப் பாரம்பரியங்களை மதித்துச் செயற்படுவார்.
✓ புத்தாண்டுக் காலத்தில் நிகழத்தக்க பொதுவான விபத்துக்களை இனங்கண்டு பாதுகாப்பாக நடந்து கொள்வார்.

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- ✓ புத்தாண்டு சமயங்களில் நடைபெறும் கிராமிய விளையாட்டுக்களில் கூட்டாக ஈடுபடுவார்.
- ✓ புத்தாண்டு காலத்தில் தயாரிக்கப்படும் பலகாரங்களின் மாதிரிகளையும் புத்தாண்டின் பொலிவைக் காட்டும் சித்திரங்களையும் ஆக்கங்களையும் காட்சிப் படுத்துவார்.

## உள்ளடக்கம்

- ✓ தமிழ், சிங்கள (இந்து, பௌத்த) புத்தாண்டுக் காலத்தில் பிரதேசத்தில் வானிலை, பொருளாதாரம், சமூகம் ஆகியவற்றில் ஏற்படும் மாற்றங்கள்.
- ✓ இந்து, சிங்கள புத்தாண்டு சுபநேரங்கள், அவற்றுடன் தொடர்புடைய பாரம்பரியங் கள் பற்றிய தகவல்கள்.
- ✓ எமதும் எமது மூதாதையோரினதும் புத்தாண்டுப் பழக்க வழக்கங்களுக்கும் விளையாட்டுக்களுக்கு இடையிலான ஒற்றுமை, வேற்றுமைகள் பற்றி அறிந்து கொள்ளலும் அவற்றுள் சிலவற்றைப் போலச் செய்தலும்.
- ✓ பல்வேறு இனத்தவரின் புத்தாண்டு பற்றிய தகவல்கள்.
- ✓ புத்தாண்டுக் காலத்தில் பிரதேசத்தில் இடம்பெறும் சாதக, பாதக நிகழ்வுகள் பற்றிய தகவல்கள்.
- ✓ புத்தாண்டுடன் தொடர்புபட்ட விளையாட்டுகள்.
- ✓ புத்தாண்டுக் காலத்துக்குரிய பாடல்களைப் பாடி ஆடுதல். (புத்தளிப்புக் கருவிகளைப் பயன்படுத்தி)
- ✓ புத்தாண்டுக் காலத்தில் தயார்செய்யப்படும் பலகாரங்களின் மாதிரிகளும் சித்திர ஆக்கங்களும் கண்காட்சிகளும்

## அணுகுமுறையும் செயற்பாடுகளும்

- ✓ புத்தாண்டுக் கால பாரம்பரியங்கள் பற்றிய அனுபவங்களை, விளையாட்டாகப் புத்தாண்டுக் கொண்டாட்டங்களை நடாத்துவதனூடாகப் பெறல்.
- ✓ பாடசாலையை அல்லது அல்லது பிரதேசத்தைச் சேர்ந்த மூத்தவர் ஒருவரிடம் புத்தாண்டுப் பாரம்பரியங்கள் பற்றி விளக்கம் பெறல்.
- ✓ புத்தாண்டுக் காலத்தில் அவதானிக்கத்தக்க மாற்றங்கள் பற்றிக் கலந்துரையாடல்.
- ✓ புத்தாண்டுக்கால விளையாட்டுக்களில் ஈடுபடுதல்
- ✓ புத்தாண்டுக் காலத்தில் நிகழத்தக்க விபத்துக்களைத் தவிர்த்தல் தொடர்பாகக் கவனத்தை ஈர்ப்பதற்காக அதுபோன்ற அனுபவங்கள், செய்தித்தாள் அறிக்கைகள், படங்களைத் துணையாகக் கொண்டு கலந்துரையாடல்.
- ✓ புத்தாண்டுக் காலத்தில் இடம்பெறும் பல்வேறு செயற்பாடுகளுள் விருப்பமானவற்றை வரையச் செய்தல். புத்தாண்டுக் கொண்டாட்ட காலத்தில் தயாரிக்கப்படும் பலகாரங்களின் மாதிரியுருக்களை ஆக்குதல்.

# கருப்பொருள் : 6.0 நாம் காணும் வானம்

## தேர்ச்சிகள்

- ✓ நாளில் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் வானத்திலும் அயற் சூழலிலும் ஏற்படும் மாற்றங்களை நுணுகி ஆராய்ந்து அறிக்கை செய்வார்.
- ✓ இரசனையுடன் செய்துபார்த்தவாறு காற்றின் துணையுடன் பொருட்களை வானத்தில் மிதக்கச் செய்வார்.
- ✓ அன்றாட வாழ்வில் சூரிய ஒளி பயன்படும் விதத்தை வெளியிடுவார்.
- ✓ கடுமையான சூரிய ஒளியினால் ஏற்படும் அசௌகரியங்களை, பாதிப்புக்களைத் தவிர்ப்பதற்கான வழிவகைகளை மேற்கொள்வார்.
- ✓ வானத்தின் அழகைக் மதித்து, பாடல்களைப் பாடியாடுவார். கதை கூறுவார்.
- ✓ வெவ்வேறு ஊடகங்களைப் பயன்படுத்தி வானின் வனப்பைக் காட்டும் ஆக்கங்களை நிருமாணிப்பார்.
- ✓ வெளியைப் பயன்படுத்தி விளையாட்டுக்களில் ஈடுபடுவார்.

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## உள்ளடக்கம்

- ✓ மாலை மயங்கும் போதும் பொழுது விடியும் போதும் வானத்திலும் அயலிலும் நிகழுபவை.
- ✓ பகற்கால வானத்தின் பண்புகள், சூரிய ஒளியின் பயன்கள், அதிக சூரிய ஒளி யினால் ஏற்படக்கூடிய தீங்குகளை தவிர்க்கும் வழிகள்.
- ✓ வானில் யாதேனுமொன்றை மிதந்து செல்லச் செய்வதற்காகக் கையாளத்தக்க உத்திகள்.
- ✓ வானத்தின் அழகை விளக்கும் பாடல், கீதம், கதை.
- ✓ வெவ்வேறு ஊடகங்களை உபயோகித்து, வானின் வனப்பைக் காட்டும் ஆக்கங்கள் புரிதல்.
- ✓ வெளியைப் பயன்படுத்தி விளையாடுதல்.

## அணுகுமுறையும் செயற்பாடுகளும்

- ✓ மாலை மயங்கும் போதும் பொழுது விடியும் போதும் சூழலில் நிகழும் மாற்றங் களை அவதானித்தலும் அறிக்கை செய்தலும்.
- ✓ இயற்கைப் பொருட்களைப் பற்றிய பாடல்களைப்பாடி ஆடல், கதை கூறுதல்.
- ✓ வானத்தின் அழகை அவதானித்துச் சித்திரமாக வடித்தலும், பல்வேறு விதமான மாதிரியுருக்களை ஆக்கச் செய்தலும்.
- ✓ பகற்கால வானத்தின் தன்மையை அவதானிக்கச் செய்து அவதானித்த பண்புகளை வெவ்வேறு வகைளில் அறிக்கைப்படுத்த வாய்ப்பளித்தல்.
- ✓ வானத்தில் யாதேனுமொன்றை மிதந்து செல்லச் செய்யத்தக்க உத்திகளைக் கையாண்டு பார்க்க வாய்ப்பளித்தல்.
- ✓ வெளியைப் பயன்படுத்தி மேற்கொள்ளும் விளையாட்டுக்களில் ஈடுபட வாய்ப்பளித்தல்.

# கருப்பொருள் : 7.0 நாம் உண்பனவும் குடிப்பவையும்

## தேர்ச்சிகள்

- ✓ வேளையுணவில் அடங்கியுள்ளவை பற்றி அறிந்து, அதில் கூடுதலாக இருப்பது யாது என வெளியிடுவார்.
- ✓ உணவு தயாரிப்பதற்காக தாவரங்களிலிருந்தும் பிராணிகளிலிருந்தும் கிடைக்கும் பொருள்களை நுணுகி ஆராய்ந்து அறிக்கைப்படுத்துவார்.
- ✓ உணவினால் எமது உடல் வளர்ச்சிக்கும் பாதுகாப்புக்கும் கிடைக்கும் வெவ்வேறு பயன்களை மதிப்பார்.
- ✓ உணவுப்பொருள் என்றவகையில் கீரையின் முக்கியத்துவத்தை விளங்கி அன்றாட உணவு வேளைகளின் போது கீரையைச் சேர்த்துக் கொள்வார்.
- ✓ நோய்களைத் தவிர்ப்பதற்குரிய உணவு முறையைக் கடைப்பிடிப்பார்.
- ✓ உணவு மாத்திரமன்றி பொருத்தமான பானவகைகளையும் போதியளவில் உட்கொள்ளும் பழக்கத்தையும் ஏற்படுத்திக் கொள்வார்.
- ✓ உணவின் முக்கியத்துவத்தையும் நற்பழக்கவழக்கங்களையும் அழகியலுணர்வுடன் முன்வைப்பார்.
- ✓ சீரான உடல் வளர்ச்சிக்குப் பொருத்தமான செயற்பாடுகளிலீடுபடுவார்.

## உள்ளடக்கம்

- ✓ எமது வேளையுணவில் பிரதான உணவாக மா(மாப்பொருள்) செறிந்த உணவுப் பொருளொன்று அடங்கியிருத்தல்.
- ✓ எமது உணவுடன் சேர்பவைகள் முக்கியமாக மரஞ்செடி கொடிகளிலிருந்தும் பிராணிகளிலிருந்தும் கிடைத்தல்.
- ✓ உடல் வளர்ச்சிக்கும் பாதுகாப்புக்குப் பொருத்தமான உணவும் பானங்களும்.
- ✓ பிரதான உணவுடன் சேரும் ஏனைய உணவுகள் மூலம் எமது வளர்ச்சிக்குத் தேவையான பல்வேறு பொருள்கள் கிடைக்கின்றமை.

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- ✓ தமது உடலின் வளர்ச்சியும் ஆரோக்கியமும்.
- ✓ உணவு தயாரிக்கும் பல்வேறு முறைகள்.
- ✓ உணவின் முக்கியத்துவமும், நற்பழக்கவழக்கங்களை வெளிப்படுத்தும் ஆடல் பாடல்கள், குறு நாடகங்களும்.
- ✓ உடல் வளர்ச்சிக்குப் பொருத்தமான செயற்பாடுகள்.

### அணுகுமுறையும் செயற்பாடுகளும்

- ✓ வேளையுணவில், தாவரங்களிலிருந்தும் பிராணிகளிலிருந்தும் பெறப்படும் உணவு கள் அடங்கியுள்ளன என்பதையும், வேளையுணவில் அதிக அளவில் மாப்பொருள் செறிந்த உணவுப்பொருள் அடங்கியிருக்கும் என்பதையும் பற்றி நேரடி அனுபவம் பெறத்தக்க வகையில் வேளையுணவின் கூறுகளை அவதானிக்க வாய்ப்பளித்தல்.
- ✓ தமது உடலின் வளர்ச்சி பற்றிய அனுபவங்களைக் கலந்துரையாடல்.
- ✓ பழக்கலவை (சலாது), பழப்பானம் போன்ற ஒரு பானத்தை அல்லது ஓர் உணவை வகுப்பில் தயாரிக்க வழிப்படுத்தல்.
- ✓ உணவுகளின் பண்புகள், உணவுப் பழக்கங்களின் முக்கியத்துவம் என்பன பற்றி மேலும் அறிவூட்டலுக்கான அழகியற் செயற்பாடுகளில் ஈடுபடுத்துதல்.
- ✓ உடல் வளர்ச்சிக்கு உகந்த விளையாட்டுகளில் ஈடுபடல்.
- ✓ வெவ்வேறு பொருள்களைப் பயன்படுத்தி உணவுப் பொருள்களின் மாதிரியுருக் களை ஆக்க வாய்ப்பளித்தல்.

## கருப்பொருள் : 8.0 தகவல்கள் பெறும் முறைகள்

### தேர்ச்சிகள்

- ✓ குரலையும் முகம் உட்பட ஏனைய சில உடலுறுப்புக்களையும் பயன்படுத்தி கருத்துகளையும், உணர்வுகளையும் சரியாக வெளியிடுவார்.
- ✓ தகவல்களை எளிதாகத் தொடர்பாடுவது போலவே, இரசனைக்காக சித்திரங்களை யும் ஒளிப் படங்களையும் சுவரொட்டிகளையும் விகடச் சித்திரங்களையும் பயன் படுத்துவார்.
- ✓ சுவர்ப்பத்திரிகை தயாரிப்பதில் பங்களிப்பு வழங்கி இரசனையைப் பெறுவார்.
- ✓ சரியான தகவல்களைப் பெறும் ஆற்றலையும், வழங்கும் ஆற்றலையும் வெளிப் படுத்துவார்.

### உள்ளடக்கம்

- ✓ கருத்துக்களையும் உணர்வுகளையும் வெளியிடுவதற்காக புலனங்கங்களைப் பயன்படுத்தும் விதம்.
- ✓ ஒளிப்படங்கள், விகடச் சித்திரங்கள், சுவரொட்டிகள், சித்திரங்கள் மூலம் வெளிப் படுத்தப்படும் தகவல்களை மிகத் தெளிவாகக் கிரகிக்கும் ஆற்றலையும் வெளியிடும் ஆற்றலையும் வளர்த்தல்.
- ✓ பலவகைப் பிரச்சாரங்களுக்காக அச்சு ஊடகங்கள் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள்.
- ✓ சுவர்ச்செய்தித்தாள் நிருமாணித்தல்.
- ✓ தகவல்களை வழங்கும், பெறும் விநோதமான விளையாட்டுக்கள்.

### அணுகுமுறையும் செயற்பாடுகளும்

- ✓ கருத்துக்களையும் உணர்வுகளையும் வெளிப்படுத்துவதற்காக புலனங்கங்களைப் பயன்படுத்தும் விதம் பற்றிய அனுபவங்களைப் பெறுவதற்காகச் செயற்பாடுகளில் ஈடுபடுத்துதல்.

  **எடுத்துக்காட்டு:** மாணவரை இருவரிருவராக,சிறு குழுக்களாக வகுத்து உரையாடவும் முகத்தினால் உணர்வுகளை வெளிப்படுத்த வும் வாய்ப்பளித்தல்.

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- ✓ ஒளிப்படங்கள், விகடச்சித்திரங்கள், பத்திரிகைத் துணுக்குகள் போன்றவற்றால் வெளியிடப்படும் கருத்துக்கள், உணர்வுகள் பற்றிக் கலந்துரையாட வாய்ப்பளித்தல்.
- ✓ சரியான தகவல்களைப் பெறும், வழங்கும் விளையாட்டுக்களில் ஈடுபடல்.

## கருப்பொருள் : 9.0 சுற்றாடலில் நிகழும் மாற்றங்கள்

### தேர்ச்சிகள்

- ✓ நாள் நகரும்போது அயற்சூழலில் நிகழும் மாற்றங்களுக்கு ஏற்ப இயைபடைந்து உணர்வுபூர்வமாக துலங்குவார்.
- ✓ இயற்கைக் காரணங்களால் சுற்றாடலில் நிகழும் மாற்றங்கள் தொடர்பாக உணர்வுடன் துலங்குவார்.
- ✓ சுற்றாடலில் நிகழும் பிரதிகூலமான மாற்றங்களை அனுகூலமான மாற்றங் களாக்கிக் கொள்வதில் பங்களிப்பார்.
- ✓ சுற்றாடலில் நிகழும் மாற்றங்களை ஆடல், பாடல், வாத்திய இசை, ஆக்கங்கள் மூலம் வெளிப்படுத்துவார்.
- ✓ சுற்றாடலில் மாற்றங்களை வெளிப்படுத்தும் ஆக்கங்களை பல்வேறு ஊடங்களைக் கொண்டு வெளிப்படுத்துவார்.

### உள்ளடக்கம்

- ✓ தமது அயற் சூழலில் நிகழும் மாற்றங்கள்.
- ✓ அண்மைக்காலத்தில் (ஏறத்தாழ கடந்த ஒரு வருட காலத்துள்) மழை, காற்று, வறட்சி போன்ற இயற்கை நிகழ்வுகளால் கிராமத்துக்கு/ நகருக்கு/வீதிக்கு ஏற்பட்ட பிரதிகூலமான தாக்கங்கள் பற்றித் தேடியறிதலும் அவ்வாறானவற்றை எதிர் கொள்ளும் விதமும்.
- ✓ இயற்கைச் சூழலில் நிகழும் மாற்றங்களை வெவ்வேறு விதங்களில் வெளிக் காட்டுதல்.

### அணுகுமுறையும் செயற்பாடுகளும்

- ✓ அயற் சுற்றாடலில் நிகழும் மாற்றங்களை (பாடசாலை ஆரம்பத்திலும், பாடசாலை நடைபெறும் போதும்,பாடசாலை விடும் நேரத்திலும்) அவதானிக்க வாய்ப்பளித்தல், சூழலுக்குப் பிரதிகூலமானவையாக அமையத்தக்க மாற்றங்களை அனுகூலமான வையாக மாற்றுவதற்காகச் செய்யத்தக்கவை பற்றிக் கருத்துத் தெரிவிப்பதற்கு வாய்ப்பளித்தல், செயன்முறை அனுபவங்களைப் பெற வாய்ப்பளித்தல்.
- ✓ இயற்கைச் சுற்றாடலில் நிகழும் மாற்றங்கள் (காற்று, மழை, வறட்சி போன்ற) தொடர்பான அனுபவங்கள் பற்றிக் கலந்துரையாடல். அவ்வாறானவற்றுக்கு உள்ளான இடங்கள் இருப்பின், அவற்றை அவதானிக்கவும் அறிக்கைப்படுத்தவும் வாய்ப்பளித்தல்.
- ✓ சுற்றாடலில் நிகழும் மாற்றங்களை ஆடல், பாடல், நடிப்பு மூலம் வெளியிட வாய்ப்பளித்தல்.
- ✓ சுற்றாடலில் நிகழ்ந்த மாற்றங்களுள் தமது மனதைக் கவர்ந்த ஒரு சந்தர்ப்பத்தைச் சித்திரமாக வரைய வழிப்படுத்துதல்.

## கருப்பொருள் : 10.0 விருப்பும் விருப்பமின்மையும்

### தேர்ச்சிகள்

- ✓ பாடசாலையில் எதிர்கொள்ளும் நிகழ்வுகளுள் தாம் விரும்பும், விரும்பாத நிகழ்வுகள் அனுபவங்களை ஏனையோருடன் பரிமாறிக்கொள்ளல்.
- ✓ பாடசாலையில் இடம்பெறும் விரும்பாத நிகழ்வுகளுக்கு காரணமாக அமைப வற்றைத் தேடியறிந்து, அந்நிகழ்வுகளை விரும்பத்தக்கனவாக மாற்றிக் கொள்வதற் கான ஆலோசனைகளை முன்வைப்பார்.

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- ✓ அயற் சுற்றாடலில் காணப்படும் ஆபத்தான/ அபாயகரமான இடங்களையும் சந்தர்ப்பஙகளையும் கண்டறிந்து அவற்றில் இருந்து பாதுகாப்புப் பெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வார்.
- ✓ பெரும்பாலானோரது விருப்பப்படி தெரிவு செய்த விளையாட்டில், நடிப்பில், பாடலில் ஈடுபட முன்வருவார்.
- ✓ தமது விருப்பின்படி தெரிவு செய்து கொண்ட ஓர் ஆக்கத்தினூடாக ஆற்றல்களை வெளிப்படுத்துவார்.

## உள்ளடக்கம்

- ✓ சுற்றாடலில் அன்றாடம் இடம்பெறும் நிகழ்வுகளுள் தாம் விரும்பும் நிகழ்வுகளும் விரும்பாத நிகழ்வுகளும்.
- ✓ இடம்பெறும் விருப்பமற்ற நிகழ்வுகளுக்கான அனுமான காரணங்களும் அவற்றைத் தவிர்ப்பதற்காக மேற்கொள்ளத்தக்க வழிவகைகளும்.
- ✓ சுற்றாடலில் பிராணிகள் மரஞ்செடிகள் தொடர்பாக நிகழுகின்ற, தாம் விரும்பும், விரும்பாத நிகழ்வுகள்.
- ✓ தாம் விரும்பாத நிகழ்வுகளை, விரும்புபவையாக மாற்றுவதற்காக மேற்கொள்ளத் தக்க வழிவகைகள்.
- ✓ வெவ்வேறு மக்கட் பிரிவினருடன் தொடர்புபட்ட பழக்கவழக்கங்கள், நடத்தைகள் தொடர்பான உணர்வு.
- ✓ மாணவர் விரும்பும் வெளிக்கள விளையாட்டுக்கள், ஆடல் பாடல்கள், ஆக்கங்கள்.
- ✓ தமது மனதைக் கவர்ந்த பாத்திரங்களை நடித்தல். (போலச் செய்தல்)

## அணுகுமுறையும் - செயற்பாடுகளும்

- ✓ பாடசாலையில் நிகழுகின்ற தாம் விரும்பும், விரும்பாத நிகழ்வுகள் பற்றிக்கருத்துத் தெரிவிப்பதற்கு மாணவர்க்கு வாய்ப்பளித்தல். இயலுமாயின் நடனமாக வெளிப் படுத்த வாய்ப்பளித்தல்.
- ✓ இனங்கண்ட சம்பவங்கள் விருப்பமான, விருப்பமற்ற சம்பவங்களாவதற்கான காரணங்கள் பற்றிக் கலந்துரையாடுதல்.
- ✓ சுற்றாடலில் உள்ள மரஞ்செடி கொடிகள், பிராணிகள் தொடர்பாக நிகழும் விருப்பமான விருப்பமற்ற நிகழ்வுகளைத் தேடியறிய வழிப்படுத்தல். அது தொடர்பான அனுபவங்களையும் சேகரித்த தகவல்களையும் கலந்துரையாட வாய்ப்பளித்தல்.
- ✓ மரஞ்செடி கொடிகளைப்போலவே பிராணிகளாலும் ஏற்படத்தக்க ஆபத்துக்கள் தொடர்பான அனுபவங்களைப் பற்றி உரையாடல், அவ்வாறான ஆபத்துக்களை தவிர்ப்பதற்கான வழிவகைகளை முன்வைக்க வாய்ப்பளித்தல்.
- ✓ தாம் விரும்பும் விளையாட்டு, ஆக்கங்கள், ஆடல் பாடல்களில் தான் மிக விரும்பிய வகிபாகமேற்று நடித்தல்.

## கருப்பொருள் : 11. எமக்குத் தேவையானவை கிடைக்கும் விதம்

## தேர்ச்சிகள்

- ✓ பாடசாலை, வீட்டுச் சூழலிலிருந்து தேவையான உதவிகளைப் பெற்று வெற்றிகர மான கற்றலில் ஈடுபடுவார்.
- ✓ தமது கற்றல் நடவடிக்கைகளில் பாடசாலையிலும் வீட்டிலும் உதவுவோரை மதிப்பார்.
- ✓ பொருள்களையும் உபகரணங்களையும் ஒழுங்காகவும், தூய்மையாகவும், பாதுகாப்பாகவும் பயன்படுத்துவார்.
- ✓ பாடசாலையின் பொதுப் பொருள்களையும் பொதுச்சொத்துக்களையும் பாதுகாப்பதில் பங்களிப்பார்.

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- ✓ வெவ்வேறு வேலைகளுக்கு உதவுவோரினதும் உதவும் பொருள்களினதும் பண்புகளைக் குறிப்பாக வெளிப்படுத்தத்தக்க வகையில் அழகியற் செயற் பாடுகளிலும் வெவ்வேறு ஆக்கங்களிலும் ஈடுபடுவார்.
- ✓ வெவ்வேறு பொருட்களைப் பாவித்தவாறு கையாளக்கூடிய பொருட்களினதும் உபகரணங்களினதும் மாதிரிகளை உருவாக்குவார்.

### உள்ளடக்கம்

- ✓ தமது கற்றல் தேவைகளைப் பூர்த்தி செய்யும் இடங்கள் என்ற வகையில் பாடசாலையும் வீடும்.
- ✓ தமது கற்றலுக்குத் தேவையானவற்றுள், பாடசாலையினால் வழங்கப்படுபவை (ஆட்கள், பொருள்கள், இடவசதி போன்றன). பொருள்கள், உபகரணங்கள் போன்றவற்றைத் துப்புரவாகவும் கவனமாகவும் பயன்படுத்தும் விதம்.
- ✓ பாடசாலையினால் வழங்கப்படும் கற்றல் உதவிகள்.
- ✓ தமது கற்றலுக்குத் தேவையானவற்றுள் வீட்டினால் வழங்கப்படுபவை.
- ✓ பாடசாலையின் பொதுச்சொத்துக்களை உருவகிக்கும் கதைகள், சித்திரங்கள் ஆக்குதல்.
- ✓ பொருட்கள், உபகரணங்கள் ஆகியவற்றால் கிடைக்கும் பயன்கள் பற்றிய ஆடல் பாடல்கள்.
- ✓ பல்வேறு பொருட்களைக் கொண்டு பாடசாலையில் பயன்படுத்தப்படும் பொருட்கள், உபகரணங்களின் காட்டுருக்கள் தயாரித்தல்.

### அணுகுமுறையும் செயற்பாடுகளும்

- ✓ கற்றலுக்காகப் பாடசாலை, பாடசாலைச் சூழல், வீடு ஆகியவற்றின் மூலம் கிடைக்கும் உதவிகள் பற்றிக் கலந்துரையாடலும், உதவிகளை மதித்தலும்.
- ✓ வகுப்பறையில் பொருள்களைத் தூய்மையாகவும் ஒழுங்காகவும் பாதுகாப்பாகவும் வைக்கப் பரிச்சயப்படுத்தல்.
- ✓ வகுப்பறையில் பயன்படுத்தப்படும் சில உபகரணங்களின் மாதிரிகளை ஆக்க வாய்ப்பளித்தல்.
- ✓ பொருள்கள், உபகரணங்களின் தொழிற்பாடு வெளிக்கொணரப்படும் வகையில், பாடல் ஆடல்களில் ஈடுபடல்.
- ✓ பாடசாலையில் பொதுச் சொத்துக்களைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை வெளிக்கொணருவதற்காகக் கலந்துரையாடல். பொதுப் பெருள்களைப் பாதுகாப் பதில் பங்களிப்புச் செய்வதன் முக்கியத்துவத்தை வெளிக் கொணர்தல். பாடசாலை யில் பொது இடங்களை அவதானித்து சேதங்கள் விளைந்துள்ளனவா எனத் தேடியறிய வழிப்படுத்துதல். அவ்வாறான இடங்களை சீராகப் பேணுவதற்காகக் கையாளத்தக்க வழி வகைகளை முன்வைக்க வாய்ப்பளித்தல்.
- ✓ பாடசாலைத் தோட்டத்தை அவதானித்து தமது மனதைக் கவர்ந்த ஓர் இடத்தைச் சித்திரமாக வரைய வாய்ப்பளித்தல். ஒரு பொதுச்சொத்து / பொதுப்பொருள் பேசுவது போன்று உருவகித்துப் பேச வாய்ப்பளித்தல்.

## கருப்பொருள் : 12.0 போக்குவரத்து

### தேர்ச்சிகள்

- ✓ வீட்டிற்கு வருவோரின் போக்குவரத்து தொடர்பாக தகவல்களை சேகசரித்து அறிக்கைப்படுத்துவார்.
- ✓ சரியான மெய்நிலையைப் பேணி நடந்து செல்வார்.
- ✓ நடத்தல், அமருதல், பாரந்தூக்குதல் போன்றவற்றின்போது உடலின் சமநிலையைப் பேணுவார்.
- ✓ தடைகள், இடர்களில் இருந்து தம்மைப் பாதுகாத்தபடி நடந்து செல்வார்.

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- ✓ சமநிலையையும் , சரியான மெய்ந்நிலைகளையும் பேணியவாறு விளையாட்டுக் களில் ஈடுபடுவார்.
- ✓ உடலின் சமநிலை பேணப்படும் பல்வேறு மெய்ந்நிலைகளைக் காட்டியவாறு ஆடல் பாடல்களில் ஈடுபடுவார்.

### உள்ளடக்கம்

- ✓ தமது வீட்டார்,வீட்டுக்கு வருவோர் ஆகியோரின் போக்குவரத்து பற்றிய தகவல்கள்.
- ✓ சரியான மெய்ந்நிலையைப் பேணியவாறு நடந்துசெல்லல்.
- ✓ பாதையில் நடந்து செல்லும் போதான பாதுகாப்பு.
- ✓ சமநிலையாக நடத்தல்.
- ✓ பொதுவாகப் பயன்படுத்தப்படும் வாகனங்களின் மாதிரியுருக்கள்.
- ✓ சமநிலையைப் பேணி சரியான மைநிலைகளைப் பின்பற்றி மேற்கொள்ள வேண்டிய விளையாட்டுக்கள்.

### அணுகுமுறையும் செயற்பாடுகளும்

- ✓ சரியான மெய்ந்நிலைகளைப் பேணியவாறு நடந்து செல்லுதல் பற்றிய அனுபவங்களை வழங்குவதற்காகச் செயற்பாடுகளில் ஈடுபட வாய்ப்பளித்தல்.
- ✓ விளையாட்டு முற்றத்தைப் பயன்படுத்தி சமநிலையாக நடந்துசெல்லும் செயற்பாடு களில் ஈடுபட வாய்ப்பளித்தல்.
- ✓ பாதையில் பயணஞ் செய்யும்போது பின்பற்ற வேண்டிய சரியான முறைகள், பாதுகாப்பாகப் பயணஞ் செய்தல் ஆகியன பற்றிக் கலந்துரையாடலும் பொருத்த மான செயற்பாடுகளில் ஈடுபடுத்தலும்.
- ✓ பாரந்தூக்குதல், அமர்தல், நடத்தல் ஆகிய மெய்ந்நிலைகளைச் செய்துகாட்ட வாய்ப்பளித்தல். பாடலுடன் கூடிய பாத்திரமேற்று நடிப்புக்களை முன்வைக்க வாய்ப்பளித்தல்.
- ✓ சமநிலையைப்பேணி செய்யக்கூடிய ஆக்கபூர்வமான விளையாட்டுக்களில் ஈடுபடல்.

## கருப்பொருள் : 13.0 ஒளியுடன் (வெளிச்சத்துடன்) விளையாட்டு

### தேர்ச்சிகள்

- ✓ இயற்கையாக வெளிச்சம் கூடுதலையும், குறைதலையும் அதற்கேற்பச் சூழலில் நிகழும் மாற்றங்களையும் ஆராய்வார்.
- ✓ வெளிச்சம் பரவுவதை கூட்டவும் குறைக்கவும் வெளிச்சம் பரவும் திசையை மாற்றவும் செய்யத்தக்கவற்றைக் கையாண்டு பார்ப்பார்.
- ✓ வெளிச்சத்தின் திசை, தூரம் என்பன மாற்றமடைவதற்கேற்ப நிழல்களின் நீளம் வேறுபடுகின்றமையை அவதானித்து அவற்றுடன் தொடர்புடைய விளையாட்டுக் களில் ஈடுபடுவார்.
- ✓ வெளிச்சத்தின் பரவல் கூடிக்குறையத்தக்கவாறான ஆக்கங்களையும் வெவ்வேறு நிற வெளிச்சங்களை ஏற்படுத்தக்கூடியவாறான ஆக்கங்களையும் உருவாக்குவார்.
- ✓ வெளிச்சம் கூடும்போதும் குறையும் போதும் சூழலில் ஏற்படும் மாற்றங்கள் தொடர்பான ஆடல் பாடல்களில் ஈடுபடுவார்.

### உள்ளடக்கம்

- ✓ இயற்கையாகச் சூழலில் வெளிச்சம் கூடும், குறையும் சந்தர்ப்பங்கள்.
- ✓ வெளிச்சம் குறைவடையும்போது சூழலில் ஏற்படும் மாற்றங்கள்.
- ✓ யாதேனுமோர் இடத்துக்குக் கிடைக்கும் சூரிய வெளிச்சத்தின் அளவைக் கூட்டக் கூடிய, குறைக்கக்கூடிய எளிமையான முறைகள்.
- ✓ நிழல் தொடர்பான விளையாட்டுக்கள்
- ✓ வெளிச்சம் செல்லும் திசையை மாற்றக்கூடிய முறைகள்.
- ✓ பல்வேறு வர்ணங்களைப் பயன்படுத்தி செய்யும் ஆக்கங்களும், பல்வேறு நிறங்களைக் காண்பிக்கும் ஆக்கங்களும்.

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## அணுகுமுறையும் செயற்பாடுகளும்

- ✓ இயற்கையில் வெளிச்சம் கூடும் சந்தர்ப்பங்கள், குறைவடையும் சந்தர்ப்பங்கள் தொடர்பாகத் தமது அனுபவங்களை வெளியிட வாய்ப்பளித்தல்.
- ✓ வெளிச்சம் கூடும்போதும் குறைவடையும் போதும் சூழலில் ஏற்படும் மாற்றங்களை (தாவரங்கள், பிராணிகளில்) அவதானிக்க வாய்ப்பளித்தலும், அனுபவங்களை வெளியிட வாய்ப்பளித்தலும் வெவ்வேறு வகையாக அறிக்கைப்படுத்த வாய்ப்பளித்தல்.
- ✓ நிழல்கள் சார்ந்த சில விளையாட்டுக்களில் ஈடுபட வாய்ப்பளித்தல்.
- ✓ வெளிச்சம் பரவுவதைக் கூட்டக்கூடிய, குறைக்கக்கூடிய வெளிச்சத்தின் திசையை மாற்றக்கூடிய முறைகள் தொடர்பான செயன்முறை அனுபவங்களை வழங்கத்தக்க சந்தர்ப்பங்களை உருவாக்கிக்கொடுத்தல்.
- ✓ பல்வேறு வர்ணங்களைப்பயன்படுத்தி பல நிறங்கள் காணக்கூடிய விதத்தில் ஆக்கங்களை மேற்கொள்ள மாணவரை வழிப்படுத்தல்.

# கருப்பொருள் : 14.0 மனிதர் வேலைசெய்யும் இடங்கள்

## தேர்ச்சிகள்

- ✓ அயற்சூழலில் வாழும் மக்கள், தமது சீவனோபாயத்திற்காக வேலை செய்யும் இடங்கள் பற்றிய தகவல்கள் தொடர்பாக அறிக்கைப்படுத்துவார்.
- ✓ தொழில்நுட்ப மாற்றங்களுக்கேற்ப வேலை செய்யும் விதம் மாற்றமடைந்துள்ள விதத்தை நுணுகி ஆராய்ந்து அறிக்கைப்படுத்துவார்.
- ✓ வேலைத்தளங்களின் வெவ்வேறு சந்தர்ப்பங்களைக் காட்டுவதற்கான பாத்திரமேற்று நடித்தல்கள், பாடல்களை செவிமடுத்தல், பாடல் போன்ற அழகியல் அம்சங்களில் ஈடுபட்டு இரசனையைப் பெறுவார்.
- ✓ சீவனோபாயத்திற்காகச் செய்யும் பல்வேறு வேலைகளினூடாக ஆற்றப்படும் சேவைகளை மதிப்பார்.
- ✓ வெவ்வேறு வேலைத்தளங்களில் பயன்படுத்தப்படும் கருவிகள், உபகரணங்களின் மாதிரிகளை ஆக்கி அவற்றைக் கொண்டு கிராமிய விளையாட்டுக்களில் ஈடுபடுவார்.

## உள்ளடக்கம்

- ✓ கிராமத்திலும் / அதற்கு வெளியிலுள்ள பிரதேசங்களிலும் மனிதர் வேலை செய்யும் பல்வேறு இடங்கள்.
- ✓ கிராமத்தில்/ஊரில் அதிகமானோர் செய்யும் வேலைகள் தொடர்பான தகவல்கள்.
- ✓ வேலைத்தளங்களில் வேலைகளுக்கு இடைஞ்சலான மனித நடவடிக்கைகளும் ஏனைய விடயங்களும்.
- ✓ வேலைகளைச் செய்யும் முறைகளில், காலத்துக்குக் காலம் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துதல்.
- ✓ வெவ்வேறு வேலைகளுடன் தொடர்புடைய வகையில் பண்டைதொட்டு இடம்பெற்று வரும் ஆடல் பாடல்கள்.
- ✓ வேலைத்தளங்களில் பயன்படுத்தும் சில உபகரணங்களின் மாதிரியுருக்களை ஆக்குதல்.

## அணுகுமுறையும் செயற்பாடுகளும்

- ✓ பாடசாலையின் அயற் பிரதேசத்தில் வேலைத்தளமொன்றை அவதானிக்க வாய்ப்பளித்தல். (வேலைத்தளத்தில், வேலைசெய்யும் வெவ்வேறு சந்தர்ப்பங்கள், பண்டைய முறைகள், நவீன முறைகள், ஆடையணிகள் போன்றவை) அவதானிப்புக்கள் தொடர்பாகத் தமது அனுபவங்களைக் கலந்துரையாடல்.
- ✓ வேலைத்தளத்தில் வேலை செய்யும் வெவ்வேறு சந்தர்ப்பங்களைப் பாத்திரமேற்று நடித்துக்காட்டச் செய்தல்.
- ✓ தாம் பார்வையிட்ட, செவியுற்ற அல்லது சந்தர்ப்பத்துக்குப் பொருத்தமான ஒரு வேலைத்தளம் தொடர்பான கிராமியப் பாடல்களை ஆடிப்பாட வாய்ப்பளித்தல்.
- ✓ வேலைத்தலங்களில் தமது மனதைக் கவர்ந்த சந்தர்ப்பங்களைச் சித்திரமாக வரைய வழிப்படுத்தல்.
- ✓ அவதானித்த வேலைத்தலத்தில் பயன்படுத்தப்பட்ட உபகரணங்களின் மாதிரிகளை ஆக்குவதற்கு ஆக்கிய உபகரணங்களைப்பயன்படுத்தி நடனமாட வாய்ப்பளித்தல்.

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## கருப்பொருள் : 15.0 சுற்றாடலில் உள்ள வேறுபட்ட இடங்கள்

### தேர்ச்சிகள்

- ✓ தான் பயன்பெறுவதற்காக மனிதன் சூழலில் ஏற்படுத்தியுள்ள மாற்றங்களை நுணுகி ஆராய்வார்.
- ✓ மனிதன் தனது வாழ்க்கைக்குத் தேவையான உணவை உற்பத்தி செய்யும் இடங்களை இனங்காண்பார்.
- ✓ மண்ணைப் பாதுகாக்கும் வெவ்வேறு உத்திகளைக் கையாண்டு பார்ப்பார்.
- ✓ சூழலின் பல்வகைக் கோலங்களைக் காட்டுவதற்காகத் தாம் விரும்பிய ஊடகத்தைப் பயன்படுத்தி ஆக்கங்களைச் செய்வார்.
- ✓ உடல் விருத்திச் செயற்பாடுகளுக்காக மனிதரால் தயார்ப்படுத்தப்பட்டுள்ள ஓர் இடமாக விளையாட்டு முற்றத்தை இனங்கண்டு உடல் வளர்ச்சி சார்ந்த செயற் பாடுகளில் ஈடுபடுவார்.
- ✓ சூழலின் வனப்பை மதித்து ஆடல் பாடல்களில் ஈடுபடுவார்.

### உள்ளடக்கம்

- ✓ வயல்/பண்ணை, மனிதனால் அமைக்கப்பட்ட ஒரு சூழல்.
- ✓ மண்ணைக் காப்பதற்காகவும், பயிர்களைப் பேணுவதற்காகவும் மேற்கொள்ளப் பட்டுள்ள வழிவகைகள்.
- ✓ சூழலின் பல்வகைமையைக் காட்ட வெவ்வேறு ஊடகங்களைப் பயன்படுத்தி செய்த ஆக்கங்கள், பாடல்கள், நடனங்கள் மூலம் முன்வைத்தல்.
- ✓ வெவ்வேறு வேலைகளுக்காக நிலம் பயன்படுத்தப்பட்டுள்ள விதம்ஓ பொருத்தமான ஓர் இடத்தைத் தெரிவு செய்து பொருத்தமாக ஒழுங்கமைத்து விளையாடும் விளையாட்டுக்கள்.

### அணுகுமுறையும் செயற்பாடுகளும்

- ✓ பாடசாலைத் தோட்டத்தில் / அயற் பிரதேசத்தில் அல்லது மனிதனால் அமைக்கப் பட்டுள்ள ஒரு பயிர் நிலத்தை அவதானிக்க வாய்ப்பளித்தல்.
- ✓ சேகரித்த தகவல்களை, படங்கள், சித்திரங்களின் மாதிரியுருக்கள், பாத்திரமேற்று நடித்தல் ஆகியவற்றின் மூலம் முன்வைக்க வாய்ப்பளித்தல்.
- ✓ மண்ணைப் பாதுகாக்கும் முறைகள் பற்றிக் கலந்துரையாடல், மண்ணைப் பாதுகாப்பதில் பங்களிக்கக்கூடிய செயற்பாடுகளில் ஈடுபடுத்துதல்.
- ✓ சூழலின் பல்வகைக் கோலங்களுடன் தொடர்புடைய வகையில் உடற்பயிற்சி களிலும், விளையாட்டுக்களிலும் ஈடுபடுத்துதல்.
- ✓ பல்வேறு ஊடகங்களைக்கொண்டு சூழலின் பல்வகைமையைக்காட்டும் ஆக்கங் களை முன்வைத்தல்.

## கருப்பொருள் : 16.0 எமது உதவி தேவைப்படுவோர்.

### தேர்ச்சிகள்

- ✓ உதவி தேவைப்படுவோருக்கு உதவுவதற்கு சுய விருப்புடன் முன்வருவார்.
- ✓ உதவி செய்த சந்தர்ப்பங்கள், சம்பவங்கள் பற்றிய அனுபவங்களை ஏனை யோருடன் பரிமாறிக்கொள்வார்.
- ✓ அன்றாட வேலைகளின் போது ஒவ்வொருவருக்கும் உதவி தேவை என்பதையும், தேவைப்படும் சந்தர்ப்பங்களில் ஏனையோருக்கு உதவுவது எமது பொறுப்பு என்பதையும் ஏற்றுக்கொண்டு செயற்படுவார்.
- ✓ கூட்டாக வேலை செய்வதால் சிறந்த பெறுபேற்றைப் பெறலாம் என்பதை விளங்கிக்கொள்வார் என்பதை ஏற்றுக்கொள்வார்.
- ✓ ஏனையோரின் உதவியைப்பெற்று விளையாடும் விளையாட்டுக்களில் ஈடுபடுவார்.

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## உள்ளடக்கம்

- ✓ பாடசாலைச் சூழலில்/கிராமத்தில்/ ஊரில் உள்ள உதவி தேவைப்படுவோர்.
- ✓ வகுப்பில் ஒருவருக்கொருவர் உதவி புரியும் விதங்கள்.
- ✓ உதவி செய்தலுடன் தொடர்புடைய சம்பவங்களும் அனுபவங்களும்.
- ✓ ஒருவருக்கு உதவி தேவைப்படுவதை இனங்காணும் ஆற்றலை விருத்தி செய்தல்.
- ✓ ஒவ்வொருவருக்கும் பிறரது உதவி ஒத்தாசை அவசியம்.
- ✓ கூட்டாக வேலை செய்வதன் பெறுமதியை எடுத்துக்காட்டும் கவிதையைப்/ பாடல்களைப் பாடுதல்.
- ✓ இன்னொருவரின் உதவியைப் பெற்று விளையாடக்கூடிய விளையாட்டுக்கள்.

## அணுகுமுறைகளும் செயற்பாடுகளும்

- ✓ உதவி தேவைப்படுவோர் யார் என்பது பற்றி கலந்துரையாடல் மூலம் விழிப்பூட்டல்.
- ✓ வகுப்பறையில் அல்லது பாடசாலையில் ஒருவருக்கொருவர் உதவி புரியும் விதத்தைக் கலந்துரையாடல் மூலம் வெளிக்கொணருதல்.
- ✓ ஒருவருக்கொருவர் உதவும் விதத்தை வெளிக்காட்டும் சந்தர்ப்பங்களை முன் வைக்க வாய்ப்பளித்தல். உதவி புரிதல் ஒரு நல்ல பழக்கம் என்பதை மதித்தல்.
- ✓ உதவி புரிதல் தொடர்பான சம்பவங்களையும் அனுபவங்களையும் தாம் விரும்பிய வகையில் முன்வைக்க மாணவருக்கு வாய்ப்பளித்தல்.
- ✓ உதவ வேண்டிய ஒருவருக்கு உதவி புரிவதற்கான வாய்ப்பை வகுப்பு மட்டத்தில் செயன்முறையாகச் செய்ய வழிப்படுத்தல்.
- ✓ பிராணிகள் தொடர்பான பாடல்களைத் தாளத்துடன் பாடுதல். அதற்கேற்ப நடனமாடுதல், கதைகள் கூறுதல்.
- ✓ தான் இன்னொருவரின் உதவியைப் பெற்றுச் செய்யக்கூடிய ஆக்கபூர்வமான விளையாட்டுக்களில் ஈடுபடுதல்.

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.